செய்திக் குறிப்பு dt: 20.01.2017

இந்திய ஆட்சிப்பணித் தேர்வு மாவட்ட ஆட்சியருடன் மாணவர்கள் கலந்துரையாடல்.

காரைக்கால் மாவட்ட நாட்டு நலப்பணித்திட்டம், புதுச்சேரி பல்கலைக்கழகம் காரைக்கால் மையம் இணைந்து நடத்திய இந்திய ஆட்சிப்பணி தேர்வு குறித்து மாவட்ட ஆட்சியருடன் காரை மாவட்ட பள்ளி கல்லூரி மாணவர்கள் கலந்துரையாடிய நிகழ்ச்சி காரைக்கால் நேருநகர் புதுச்சேரி பல்கலைக்கழக காரைக்கால் மையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு பல்கலைக்கழக காரைக்கால் மையத்தின் மைய தலைவர் முனைவர் அமிலன் வாழ்த்துரை வழங்கினார். காரை மாவட்ட ஆட்சியர் P. பார்த்திபன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு இந்திய ஆட்சிப்பணி தேர்வுக்கு தயாராவது குறித்து மாவட்டத்தின் பல்வேறு பள்ளி மற்றும் கல்லூரிகளின் மாணவ மாணவிகளுடன் கலந்துரையாடினார். அப்போது புதுச்சேரியில் மேலும் பல்வேறு இந்திய ஆட்சிப்பணித் தேர்வர்கள் உருவாக வேண்டும் என்றும் ஒவ்வொருவருக்கும் ஒழுக்கமாய் இரண்டு வேண்டும் ஒன்று சுயமான சிந்தனை மற்றொன்று சான்றோர்கள் சொல்வதை கேட்டு செயல்படும் சிந்தனை. வாழ்வில் எவ்வளவு தடை வந்தாலும் மாணவர்கள் தனது லட்சியத்தை மட்டுமே குறியாக கொண்டு செயல்பட வேண்டும். தோல்வியும் ஒருதடைதான் அதுதான் வெற்றியின் [illegible] வழி. [illegible]

எதையும் சாதிக்காது மனதை ஒருங்கிணைத்து சுயகட்டுப்பாட்டுடன் செயல்பட்டு ஒவ்வொரு தோல்வியிலும் ஒவ்வொரு பாடத்தைக் கற்றுக்கொண்டு நம்மை நாமே அறிந்துக் கொண்டு செயல்பட்டால் எதிலும் நிச்சயம் வெற்றியைக் காணலாம். இந்திய ஆட்சிப் பணிக்கான தேர்விற்கு பொருளாதாரம் ஒரு தடையல்ல, இருக்கின்ற நூலகத்தை முறையாக பயன்படுத்தி பயின்றாலே அதுவே இத்தேர்விற்கு முக்கியமான மூலதனம் என்றும் கூறினார்.

காரைமாவட்ட நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் சேகரன் அனைவரையும் வரவேற்று பேசினார். புதுச்சேரி பல்கலைக்கழக காரைக்கால் மைய நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் திட்ட அலுவலர் அருள்முருகன் நன்றி கூறினார். நிகழ்ச்சி ஏற்பாடுகளை ஒருங்கிணைப்பாளர் சேகரன் திட்டஅலுவலர்கள் மற்றும் புதுச்சேரி பல்கலைக்கழக காரைக்கால் மைய நிர்வாகம் ஆகியோர் செய்திருந்தனர்.

20/1/17
Asst. P. R. O. to
COLLECTOR